1981 ஜனவரி 28]

விருதுநகருக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண்-74 திரு.என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா-

விருதுநகரின் குடிதண்ணீர் தட்டுப்பாட்டினைப் போக்க அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : விருதுநகர் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. ஆய்வு வேலை முடிந்த பின் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அரசின் ஒப்புதல் பெற்றவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் வணிகத் துறையிலும், தொழில் துறையிலும் வளர்ந்து வருகிற பெரிய நகரமாகும். ஏழை பங்காளனாகவும், கல்விக்கண் கொடுத்த கருணைத் தலைவனாகவும், புனிதனாகவும், புண்ணியனாகவும், புருஷோத்தமனாகவும் இருந்த பெருந்தலைவர் வாழ்ந்த பெரும் நகரமாகும் அது. அங்கே நீண்டநாட்களாகவே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலும், அரசாங்கம் முனைந்து அந்தத் திட்டத்தை விரைவிலே செயல் படுத்த நடவடிக்கைகள் இனியாவது எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அங்கே குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பது உண்மை. விருதுநகர் நகராட்சியின் வேண்டுகோளுக்கிணங்க, வைகை நதியை ஆதாரமாகக்கொண்டு குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆய்வு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு குடிநீர்வடிகால் வாரியத்தால் அங்கீகரிக்கப்படும் நிலையில் உள்ளது. ஆய்வு மதிப்பீடு ஒப்புதல் பெற்றவுடன் விரிவான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, உத்தேச மதிப்பீடுகள் தயாரித்து, அரசுக்கு சமர்ப்பிக்கப்படும். அரசு ஒப்புதலுக்குப் பின் திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் அரசு மருத்துவமனையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி குடிதண்ணீர் தட்டுப் பாட்டைப் பற்றியது. மருத்துவமனை பற்றி என்றால் அது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: அந்த மருத்துவ விடுதியிலும் குடி தண்ணீர் இல்லை; விரைவில் அங்கு குடிதண்ணீர் சப்ளை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நகரக் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயல்படும் பொழுது இதுவும் கவனிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நகரத்திற்கு தற்போது வழங்கப்படும் தண்ணீரின் அளவு எவ்வளவு? இந்த அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கும் மதிப்பீடு எவ்வளவு வரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது? இப்பொழுது போடும் திட்டத்தின் மூலம் தண்ணீர் எப்பாழுது கிடைக்கும்? எந்த ஆண்டு வரவிருக்கிறது? நகரத்தின் வளர்ச்சியையும் கணக்கில் கொண்டு, கொடுக்கப்படும் தண்ணீர் எவ்வளவு ஆண்டுகளுக்கு அந்த நகர மக்களுக்கு போதுமானதாக இருக்கும் என்ற விவரங்களை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் ஆய்வு முடிந்தபிறகு தெரியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வு முடிந்த பிறகு தெரியும் என்று அமைச்சரவர்கள் சொல்லிவிட்டதற்குப் பிறகு என்ன செய்ய முடியும்? ஆய்வு எப்பொழுது முடியும் என்று ஒற்றையா இரட்டையா பார்க்க முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, நீண்ட நாட்களாக பற்றாக்குறையாக இருக்கிறது என்று சொல்லும் பொழுது, அரசாங்கம் சொல்லலாமே, ஆய்வு எப்பொழுது முடியும் என்று, 3 மாதம் அல்லது 6 மாதம், அல்லது ஒரு வருடம் என்று சொல்லட்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் கிடைத்து 33 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட பெருந்தலைவர் காமராஜ் போன்றவர்கள் பிறந்த ஊரிலே குடிதண்ணீர் இல்லை என்றால், இதற்காக விரைவில் ஒரு திட்டத்தைத் தீட்ட என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக முனைந்து ஆய்வு விரைவில் செய்யப்படுகிறது.

லட்டாறு அணைக்கட்டுத் திட்டம்

* வினா எண் 75—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-